**அக்டோபர் – 10**


# TNPSC துளிகள்

❖ கோயம்புத்தூரில் உள்ள அவினாசி சாலை மேம்பாலத்திற்கு, இந்தியாவின் எடிசன் மற்றும் ஒரு புதுமைப் படைப்பாளர் என்று அழைக்கப்படும் G.D. நாயுடுவின் பெயரிடப் படும்.
   - இது இம்மாநிலத்தின் மிக நீளமான உயர்த்தப்பட்ட வழித்தடமாகும் என்பதோடு இது ஹைதராபாத்தில் உள்ள பி.வி. நரசிம்மராவ் விரைவுச் சாலைக்குப் பிறகு இந்தியாவின் இரண்டாவது மிக நீளமான வழித்தடமாகும்.

❖ பிரான்சு நாட்டுப் பிரதமர் செபாஸ்டியன் லெகோர்னு தனது புதிய அமைச்சரவையை அறிவித்த சில மணி நேரங்களுக்குப் பிறகு ராஜினாமா செய்தார்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## காட்டு யானைகளின் கணக்கெடுப்பு 2025




❖ தமிழ்நாடு மாநிலத்தில் 2025 ஆம் ஆண்டு மே மாதத்தில், 3,170 காட்டு யானைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன, இது 2024 ஆம் ஆண்டில் இருந்த 3,063 என்ற எண்ணிக்கையை விட 107 அதிகமாகும்.

❖ இந்த ஒத்திசைவுக் கணக்கெடுப்பு ஆனது நேரடி மற்றும் மறைமுக முறைகளைப் பயன்படுத்தி 26 வனப் பிரிவுகளில் சுமார் 8,989.63 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் மேற் கொள்ளப் பட்டது.

❖ நீலகிரி யானைகள் வளங்காப்பகத்தில் 2,419 யானைகள் (தொகுதி எண்ணிக்கை) மற்றும் 3,163 யானைகள் (சாண எண்ணிக்கை) என்ற அதிகபட்ச எண்ணிக்கை பதிவாகியுள்ளது.

❖ மொத்த எண்ணிக்கையில் 44% யானைகள் நன்கு வளர்ந்த இளம் பருவ யானைகள் ஆகும் என்ற நிலையில் அவற்றுள் 1.77 பெண் யானைகளுக்கு 1 ஆண் யானை என்ற

பாலின விகிதம் பதிவு செய்யப் பட்டுள்ளது.

## ஏரோடெஃப்கான் 2025




- ❖ சென்னை வர்த்தக மையத்தில் நடைபெறுகின்ற ஏரோடெஃப்கான் 2025 நிகழ்வினை தமிழக முதல்வர் தொடங்கி வைத்தார்.
- ❖ இந்த மூன்று நாட்கள் அளவிலான உலகளாவிய விண்வெளி மற்றும் பாதுகாப்பு நிகழ்வினை TIDCO (தமிழ்நாடு தொழில்துறை மேம்பாட்டுக் கழகம்), AIDAT (தமிழ்நாடு விண்வெளி தொழில்துறை மேம்பாட்டுச் சங்கம்) மற்றும் பிரான்சு நாட்டின் BCI ஏரோஸ்பேஸ் நிறுவனம் ஆகியவை ஏற்பாடு செய்கின்றன.
- ❖ பாதுகாப்பு அமைச்சகத்தினால் ஆதரிக்கப்படுகின்ற இந்த நிகழ்வானது உள்நாட்டு மயமாக்கல், தன்னிறைவு மற்றும் உலகளாவிய விநியோகச் சங்கிலி ஒருங்கிணைப்பில் கவனம் செலுத்துகிறது.

## சோழர் காலக் கல்வெட்டுகள்




- ❖ மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள தேரழந்தூரில் உள்ள வேதபுரீஸ்வரர் சிவன் கோவிலில் 10 சோழர் காலக் கல்வெட்டுகளை இந்தியத் தொல்பொருள் ஆய்வு மையம்

(ASI) கண்டெடுத்து ஆவணப்படுத்தியுள்ளது.

- இரண்டு கல்வெட்டுகள் ஆனது முதலாம் குலோத்துங்க சோழனின் 34 மற்றும் 44 ஆம் ஆட்சியாண்டுகளைச் சேர்ந்தவையாகும்.
- இந்தக் கோயிலில் விளக்கு ஏற்றுவதற்காக பிராமணர்களுக்கு ஐந்து தங்க நாணயங்கள் வழங்கப்பட்டதாக இதில் பதிவு செய்யப்பட்டிருந்தது.
- மூன்றாம் குலோத்துங்க சோழனின் ஆட்சிக் காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுகள் திருமஞ்சனத்திற்கான நன்கொடைகள், கடனைத் திருப்பிச் செலுத்தாதவர்களுக்கான அபராதங்கள் குறித்தும் பதிவு செய்யப்பட்டிருந்தன அதே நேரத்தில் இதில் இரண்டாம் இராஜராஜன் சோழன் காலத்தைச் சேர்ந்த ஒரு கல்வெட்டானது நுண்டாவிளக்கு ஏற்றுவதற்கான நன்கொடைகளைக் குறிப்பிடுகிறது.

## தேசத்திற்கான சமரசப் பிரச்சாரம்





- தேசத்திற்கான சமரசப் பிரச்சாரத்தின் போது தமிழ்நாடு மத்தியஸ்தம் மற்றும் சமரச மையம் ஆனது 1,361 வழக்குகளைத் தீர்த்து வைத்தது.
- 2025 ஆம் ஆண்டு ஜூலை 01 முதல் செப்டம்பர் 30 ஆம் தேதி வரை மொத்தம் 25,584 வழக்குகள் மத்தியஸ்தத்திற்கு பரிந்துரைக்கப்பட்டன.
- திருமணத் தகராறுகள், விபத்து சார்ந்த கோரிக்கைகள், குடும்ப வன்முறை, மதிப்பிழந்த காசோலை மற்றும் வணிகத் தகராறுகள் ஆகியவை இந்த வழக்குகளில் அடங்கும்.
- வழக்குத் தரப்பினரின் வசதிக்காக நேரடி, இயங்கலை வழி மற்றும் கலப்பின முறைகள் மூலம் மத்தியஸ்தம் மேற்கொள்ளப் பட்டது.

# தேசியச் செய்திகள்


## தேசிய ஒட்டக நிலைத் தன்மை முன்னெடுப்பு

- மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வள அமைச்சகம் ஆனது, தேசிய ஒட்டக நிலைத் தன்மை முன்னெடுப்பினைத் தொடங்கத் திட்டமிட்டுள்ளது.

- இந்தியாவின் ஒட்டக எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள சரிவை நிவர்த்தி செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 1977 ஆம் ஆண்டில் சுமார் 11 லட்சமாக இருந்த இந்தியாவின் ஒட்டக எண்ணிக்கை என்பது 2019 ஆம் ஆண்டில் 2.52 லட்சமாகக் குறைந்துள்ளது.
- சுமார் 90% ஒட்டகங்கள் ஆனது இராஜஸ்தான் மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்களில் காணப்படுகின்றன.
- இது சட்ட சீர்திருத்தங்கள், சிறந்த போக்குவரத்து உள்கட்டமைப்பு மற்றும் ஒட்டகங்களுக்கான மாநிலங்களுக்கு இடையேயான வர்த்தகத்தினை ஒழுங்குபடுத்துதல் ஆகியவற்றை முன்மொழிகிறது.
- ஜூன் 22 ஆம் தேதியன்று உலக ஒட்டக தினத்தைக் கொண்டாடுவது உள்ளிட்ட விழிப்புணர்வு பிரச்சாரங்களையும் மேற்கொள்வதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.




## தேசிய வளங்காப்பு முன்னெடுப்புகள்




- சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகமானது 2025 ஆம் ஆண்டு வனவிலங்கு வாரத்தினை டேராடூனில் ஏற்பாடு செய்தது.
- இந்த நிகழ்விற்கான கருத்துரு, 'human-wildlife coexistence' என்பதாகும்.
- ஓங்கில்கள் வளங்காப்புத் திட்டத்தின் இரண்டாம் கட்டம், தேன் உண்ணும் கரடி,

கங்கை நீர் முதலை/கரியல் வளங்காப்பு, மனித-வனவிலங்கு மோதலுக்கான சிறப்பு மையம் மற்றும் காப்பகங்களுக்கு வெளியே நிலவும் புலிகளின் தாக்குதல்கள் மேலாண்மை உள்ளிட்ட 5 தேசிய திட்டங்களும் தொடங்கி வைக்கப் பட்டன.

- நதி வாழ் ஓங்கில்கள், புலிகள், பனிச் சிறுத்தைகள் மற்றும் கான மயில் ஆகியவற்றின் மக்கள் தொகை மதிப்பீட்டிற்காக நான்கு தேசிய செயல் திட்டங்கள் மற்றும் கள வழிகாட்டிக் குறிப்பும் இதில் வெளியிடப்பட்டன.

## இந்திய கைபேசி மாநாடு 2025




- 9வது இந்திய கைபேசி மாநாடானது (IMC-2025) புது டெல்லியின் யஷோபூமியில் தொடங்கப் பட்டது.
- இந்த நிகழ்வானது, ஆசியாவின் மிகப்பெரிய தொலைத்தொடர்பு, ஊடகம் மற்றும் தொழில் நுட்பக் கூட்டமாகும்.
- இது தொலைத்தொடர்புத் துறை மற்றும் இந்திய கைபேசி இணைப்புச் சேவை வழங்குநர் சங்கம் ஆகியவற்றினால் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- இந்த நிகழ்வின் கருத்துரு, "Innovate to Transform" என்பதாகும்.
- இந்த நிகழ்வானது 6G, குவாண்டம் தகவல் தொடர்பு, குறை கடத்திகள், ஒளியிழை சார்ந்த வலையமைப்புகள் மற்றும் இணையவெளி மோசடித் தடுப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.

# சர்வதேசச் செய்திகள்

## ஈரானின் நாணயத்தின் பெயர் மாற்றம்


- நீண்டகால அதிகபட்ச பணவீக்கத்திற்குப் பிறகு, அதன் நிதிப் பரிவர்த்தனைகளை எளிதாக்குவதற்காக ஈரான் அரசானது அதன் ரியால் நாணயத்தில் இருந்து நான்கு பூஜ்ஜியங்களை நீக்க உள்ளது.
- வெளிச் சந்தையில் அதன் நாணய மாற்று விகிதம் ஆனது, அமெரிக்க டாலருக்கு

தோராயமாக 1,150,000 ரியால்களாக உள்ளது.

- இரண்டு அலகுகளும் பயன்படுத்தப்படும் மூன்று ஆண்டு கட்டத்தினைத் தொடர்ந்து இதற்கான நாணயங்களை மத்திய வங்கி தயாரிக்க இரண்டு ஆண்டுகள் அவகாசம் உள்ளன.
- ரியால் அதிகாரப்பூர்வ நாணயமாக இருக்கும் என்பதோடு மேலும் இந்த மாற்றம் ஆனது உடனடியாக அல்லாமல் படிப்படியாக மட்டுமே அமல்படுத்தப்படும்.




## UNGA 80 அமர்வில் இந்தியா




- நியூயார்க் நகரில் நடைபெற்ற 80வது ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் அமர்வில் பங்கேற்ற இந்தியா ஐ.நா. சீர்திருத்தங்களுக்கான அவசரத் தேவையை வலியுறுத்தி இந்தியா உரையாற்றியது.
- UNSC காலாவதியான 1945 ஆம் ஆண்டு கால அதிகார அமைப்புகளை கொண்டுள்ளது மற்றும் நியாயமான பிரதிநிதித்துவத்தினைக் கொண்டிருக்கவில்லை என்பதை இந்தியா எடுத்துரைத்தது.
- அது G4 நாடுகளான இந்தியா, பிரேசில், ஜெர்மனி மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு

நிரந்தர உறுப்பினர் அந்தஸ்தினையும், உலகளாவியத் தெற்கு நாடுகளுக்கு அதிக பிரதிநிதித்துவ வாய்ப்பினையும் வழங்கக் கோரியது.

- முக்கியப் பிரச்சினைகளில் உலக நாடுகளின் ஒருமித்த கருத்தைத் தடுப்பதில் நிரந்தர ஐந்து உறுப்பினர் நாடுகளின் தடையுறுத்தும்/வீட்டோ அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்துவதை இந்தியா விமர்சித்தது.

# பொருளாதாரச் செய்திகள்


## இந்திய ரிசர்வ் வங்கியின் சீர்திருத்தங்கள்




- இந்திய ரிசர்வ் வங்கி ஆனது, இந்திய வங்கி முறையை உலகளாவிய தரநிலைகளுக்கு இணையாக மாற்றுவதற்காக 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 01 ஆம் தேதியன்று நான்கு முக்கிய சீர்திருத்தங்களை அறிவித்தது.
- ரிசர்வ் வங்கியானது இடர் அடிப்படையிலான வைப்புக் காப்பீட்டுத் தவணைகளை அறிமுகப் படுத்தும்.
- இதன் கீழ், சிறந்த இடர் மேலாண்மைகளைக் கொண்ட வங்கிகள் ஆனது, வைப்புத் தொகை காப்பீடு மற்றும் கடன் உத்தரவாதக் கழகத்திற்கு (DICGC) குறைந்த விகிதங்களில் செலுத்துகின்றன.
- எதிர்பார்க்கப்படும் கடன் இழப்பு (ECL) மாதிரியானது, வணிக வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு 2027 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 முதல் 2031 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி வரையில் படிப்படியான அமலாக்கத்துடன் பொருந்தும்.
- திருத்தப்பட்ட பேசல் III மூலதன விதிமுறைகள் ஆனது கடன் வழங்கீடு மற்றும் துறைசார் மீள்தன்மையை வலுப்படுத்தி, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்துறை நிறுவனங்கள் (MSME) மற்றும் வீட்டுக் கடன்களின் இடர் உண்டாக்கும் விகிதங்களைக் குறைக்கும்.
- இந்திய ரிசர்வ் வங்கியானது, புதிய முதலீடு மற்றும் வணிக வழிகாட்டுதல்களை செயல்படுத்தி, குழு நிறுவனங்களுடன் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய வணிகம் மீதான கட்டுப்பாடுகளை நீக்கி, வாரியங்களுக்கு அதிக முடிவெடுக்கும் அதிகாரத்தை வழங்கும்.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## சமூக நீதியின் நிலை 2025




- சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) ஆனது, The State of Social Justice: A Work in Progress என்ற ஓர் அறிக்கையை வெளியிட்டது.
- 1995 ஆம் ஆண்டில் 250 மில்லியனாக இருந்த உலகளாவிய குழந்தைத் தொழிலாளர் எண்ணிக்கையானது (5 முதல் 14 வயது) 2024 ஆம் ஆண்டில் 106 மில்லியனாகக் குறைந்துள்ளது.
- உலக மக்கள்தொகையில் 39% ஆக இருந்த தீவிர வறுமை நிலையானது 1995 ஆம் ஆண்டில் 10% ஆகக் குறைந்தது.
- 1995 மற்றும் 2024 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் வேலைவாய்ப்பில் உள்ளோரின் வறுமை நிலையானது 28 சதவீதத்திலிருந்து 7% ஆகக் குறைந்துள்ளது.
- 1995 ஆம் ஆண்டு முதல் இடைநிலைப் பள்ளி நிறைவு விகிதம் 22% அதிகரித்துள்ளது.
- 2000 ஆம் ஆண்டு முதல் வேலை தொடர்பான உயிரிழப்பு 10 சதவீதத்திற்கும் அதிகமாகக் குறைந்துள்ளது.
- முறைசாரா வேலைவாய்ப்பு ஆனது, இன்னும் உலகளாவியத் தொழிலாளர்களில் 58% பேரை பாதிக்கிறது என்பதோடு இது கடந்த 20 ஆண்டுகளில் 2% மட்டுமே குறைகிறது.
- பாலின தொழிலாளர் வளப் பங்களிப்பு இடைவெளியானது 2005 ஆம் ஆண்டு முதல் 3% குறைந்து 24% ஆக உள்ளது.

## உணவுமுறை ஆய்வு அறிக்கை 2025


- ICMR-INDIAB உணவுமுறை ஆய்வு 2025 அறிக்கையானது, இந்திய மருத்துவ ஆராய்ச்சி சபையினால் (ICMR) வெளியிடப்பட்டது.
- இந்திய உணவு முறையில் தினசரி கலோரிகளில் சுமார் 62% ஆனது கார்போஹைட்ரேட்டுகளிலிருந்து பெறப்படுகிறது, இது உலகளவில் மிக அதிகபட்சமாகும்.
- இந்த ஆய்வில் 36 மாநிலங்கள், ஒன்றியப் பிரதேசங்கள் மற்றும் டெல்லியில் 121,077 இளம் வயதினர் ஆய்வு செய்யப்பட்டனர்.
- அதிக கார்போஹைட்ரேட்டு கொண்ட உணவுகளில் வெள்ளை அரிசி, தீட்டப்பட்ட முழு தானியங்கள் மற்றும் கூடுதல் சர்க்கரைகள் அடங்கும்.

- தெற்கு, கிழக்கு மற்றும் வடகிழக்கு இந்தியாவில் வெள்ளை அரிசி அதிகமாகப் பயன்படுத்தப் படுகிறது; வடக்கு மற்றும் மத்திய பகுதிகளில் கோதுமை அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது.
- கர்நாடகா, குஜராத் மற்றும் மகாராஷ்டிராவில் மட்டுமே சிறு தானியங்கள் பிரதான உணவாக உள்ளது.
- ஜார்க்கண்ட், சத்தீஸ்கர், அருணாச்சலப் பிரதேசம் மற்றும் மணிப்பூர் தவிர கிட்டத் தட்ட அனைத்து மாநிலங்களிலும் நிறைவுற்ற கொழுப்பு உட்கொள்ளல் பாதுகாப்பான வரம்பு நிலைகளை மீறி வருகிறது.
- பால் மற்றும் விலங்கு மூலங்களிலிருந்து பெறப்படும் புரதங்கள் முறையே 2% மற்றும் 1% பங்குடன் தினசரி கலோரி உட்கொள்ளலில் புரதத்தின் பங்கு 12% மட்டுமே ஆகும்.




## புகையிலை பயன்பாட்டில் உலகளாவியப் போக்குகள்

**Fig. 2: Global trends in prevalence of tobacco use among people aged 15 years and older, by sex, 2000–2030 (estimates to 2020, projections to 2030)**




- உலக சுகாதார அமைப்பு (WHO) புகையிலை பயன்பாட்டில் உலகளாவியப் போக்குகள்

2000–2024 மற்றும் கணிப்புகள் 2025–2030 என்ற அறிக்கையை வெளியிட்டுள்ளது.

❖ 13 முதல் 15 வயது வரையிலான 15 மில்லியன் குழந்தைகள் உட்பட உலகளவில் 100 மில்லியனுக்கும் அதிகமான பேர் புகையிலை புகைக்கின்றனர்.

❖ கிடைக்கக் கூடிய தரவுகளைக் கொண்டு உலக நாடுகளில், வயது வந்தவர்களை விட ஒன்பது மடங்கு அதிகமாக சிறார்கள் மின்னணு சிகரெட்டுகளைப் பயன்படுத்துகின்றனர்.

❖ 2000 ஆம் ஆண்டில் 1.38 பில்லியனாக இருந்த உலகளாவிய புகையிலைப் பயனர்கள் எண்ணிக்கையானது 2024 ஆம் ஆண்டில் 1.2 பில்லியனாகக் குறைந்துள்ளது.


❖ உலகளவில் வயது வந்த ஐந்து நபர்களில் ஒருவர் இன்னும் பாதிக்கப்பட்டுள்ளதுடன், புகையிலை பயன்பாடு பரவலாக உள்ளது.

❖ 2010 ஆம் ஆண்டில் 11% ஆக இருந்த பெண்கள் மத்தியில் புகையிலை பயன்பாடு 2024 ஆம் ஆண்டில் 6.6% ஆகக் குறைந்தது, அதே நேரத்தில் ஆண்களில் புகையிலை பயன்பாட்டில் குறைவானது மெதுவாக உள்ளது.

❖ தென்கிழக்கு ஆசிய நாடுகள் ஆனது 2000 ஆம் ஆண்டில் ஆண்கள் மத்தியில் 70% ஆக இருந்த புகையிலை பயன்பாட்டை 2024 ஆம் ஆண்டில் 37% ஆகக் குறைத்தது என்ற நிலையில் இது உலகளாவியச் சரிவில் பாதி அளவிற்குப் பங்களித்தது.

# மாநிலச் செய்திகள்

## தேர்தல் நடத்தை விதிகள் – பீகார்




❖ இந்தியத் தேர்தல் ஆணையம் ஆனது 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 06 ஆம் தேதியன்று பீகார் சட்டமன்றத் தேர்தலுக்கான அட்டவணையை அறிவித்தது.

❖ இந்த அறிவிப்புடன் பீகார் முழுவதும் மாதிரி நடத்தை விதிகள் உடனடியாக அமலுக்கு வந்தன.

❖ பீகாரின் கொள்கைகள் மற்றும் அறிவிப்புகள் தொடர்பான விவகாரங்களில் மத்திய அரசுக்கும் இந்த விதி பொருந்தும்.

❖ தேர்தல் காலத்தில் அரசியல் விளம்பரங்களுக்கு பொது நிதியைப் பயன்படுத்தக் கூடாது.


❖ அரசியல் கட்சிகள் சரியான பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து ஏற்பாடுகளுக்காக கூட்டங்கள் மற்றும் ஊர்வலங்கள் குறித்து முன்கூட்டியே காவல்துறைக்கு தெரிவிக்க வேண்டும்.

❖ அமைச்சர்கள் தங்கள் அதிகாரப்பூர்வக் கடமைகளை தேர்தல் பிரச்சாரத்துடன் இணைப்பது அல்லது அரசாங்க வளங்களைப் பயன்படுத்துவது தடை செய்யப் பட்டு உள்ளது.

- கூட்டங்கள், ஊர்வலங்கள், வாக்கெடுப்புகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் சட்டம் ஒழுங்கைப் பராமரித்தல் ஆகியவை முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## இலக்கியத்திற்கான நோபல் பரிசு 2025




- ஹங்கேரிய நாட்டைச் சேர்ந்த புதின ஆசிரியரும் திரைக்கதை எழுத்தாளருமான லாஸ்லோ க்ராஸ்னஹோர்காய் இந்த ஆண்டின் இலக்கியத்திற்கான நோபல் பரிசை வென்றுள்ளார்.
- அழிவு மற்றும் பயங்கரவாதத்திற்கு மத்தியில் கலையின் ஆற்றலை மீண்டும் உறுதிப்படுத்தும் கட்டாயமான மற்றும் தொலைநோக்குமிக்க அவரது ஒட்டுமொத்தப் படைப்புகளுக்காக இந்தப் பரிசு வழங்கப்படுகிறது.
- அவர் தனது முதல் புதினமான/நாவலான சடான்டாங்கோ (Satantango) மூலம் 1985 ஆம் ஆண்டிலேயே இலக்கிய உலகில் திருப்புமுனையை ஏற்படுத்தினார்.

## UNISFA விருது



- அபேயில் உள்ள இந்திய அமைதி காப்புப் படையினருக்கு ஐ.நா. இடைக்கால பாதுகாப்புப் படையின் (UNISFA) செயல்பாட்டுத் தலைமையின் அர்ப்பணிப்பு மிக்க சேவைக்காக இந்த விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.
- அபேய் பகுதியானது தெற்கு சூடானுக்கும் சூடானுக்கும் இடையிலான எல்லைப் பகுதி ஆகும்.
- விரிவான அமைதி ஒப்பந்தத்தில் (CPA) 2004 ஆம் ஆண்டு அபேய் மோதலைத் தீர்ப்பதற்கான (Abyei Protocol) நெறிமுறையால் இதற்கு "சிறப்பு நிர்வாக அந்தஸ்து" வழங்கப்பட்டுள்ளது.
- 1950 ஆம் ஆண்டுகளில் இருந்து, இந்தியா 2,90,000க்கும் மேற்பட்ட அமைதி காப்பு படையினரை உலகளவில் 50க்கும் மேற்பட்ட பணிகளுக்கு அனுப்பியுள்ளது.
- தற்போது, உலகளாவிய அமைதி மற்றும் பாதுகாப்பை நிலைநிறுத்துவதற்காக அர்ப்பணிக்கப் பட்டுள்ள பதினொரு செயலில் உள்ள பணிகளுள் ஒன்பது பணிகளில் 5,000 க்கும் மேற்பட்ட இந்திய வீரர்கள் பணியாற்றுகின்றனர்.

## MY Bharat–NSS விருதுகள் 2022–23




- இராஷ்டிரபதி பவனில் நடைபெற்ற 50 MY Bharat–நாட்டு நலப்பணித் திட்டம் (NSS) 2022–23 விருதுகளை குடியரசுத் தலைவர் வழங்கினார்.
- 1969 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட NSS அமைப்பில், தற்போது நாடு முழுவதும் சமூக, சுகாதாரம் மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களில் சுமார் 40 லட்சம் தன்னார்வலர்கள் பணியாற்றி வருகின்றனர்.
- சிறந்த சேவைக்காக விருது வழங்கப்பட்ட 30 இளம் தன்னார்வலர்களில் பிரியானஸ் ஹசாரிகா (அசாம்), ஆயுஷி சின்ஹா (மத்தியப் பிரதேசம்), P. தினேஷ் (புதுச்சேரி), மற்றும் அங்கூர் குமார் மிஸ்ரா (உத்தரப் பிரதேசம்) ஆகியோர் அடங்குவர்.

# இதரச் செய்திகள்

## உக்ரைன் மீதான ரஷ்யத் தாக்குதல்கள்

- 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 05 ஆம் தேதியன்று, தீவிரமான ரஷ்ய எறிகணை மற்றும் ஆளில்லா விமான தாக்குதல்கள் பல உக்ரைன் பிராந்தியங்கள் மீது நடத்தப்பட்டன.
- பாதிக்கப்பட்டப் பகுதிகளில் கார்கிவ், பொல்டாவா, டோனெட்ஸ்க், லுஹான்ஸ்க், சுமி,

கெர்சன், மைகோலைவ், டினிப்ரோ, சபோரிஜியா, செர்னிஹிவ், வின்னிட்சியா, இவானோ-ஃபிராங்கிவ்ஸ்க், ஒடேசா மற்றும் லிவிவ் ஆகியவை அடங்கும்.

- இதுவரையில் உக்ரைனின் எரிவாயுத் தளங்கள் மீது நடந்த மிகப்பெரிய தாக்குதலில் 50க்கும் மேற்பட்ட எறிகணைகள் மற்றும் சுமார் 500 ஆளில்லா விமான தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★